1984 மார்ச் 27]

சூரிய சக்தியைப் பயன்படுத்தித் தெருவிளக்குகளை எரியச் செய்யும் திட்டம்.

468—(*வினா எண் 22566) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 25 கிராமங்களில் சூரிய சக்தியைப் பயன் படுத்தித் தெரு விளக்கு எரியச்செய்ய பாரத கனரக மின் கழகத் தொழிற்சாலை ஏற்பாடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பழங்குடியினர் வாழும் கல்ராயன்மலை, பச்சைமலை போன்ற மலைப்பகுதிகளில் உள்ள 17 கிராமங்களில் சூரிய சக்தியை மின் சக்தியாக மாற்றவல்ல போட்டோ வோல்ட்டேக் அமைவுகளை நிறுவி தெருவிளக்கு வசதி அளிப்பது பற்றிய சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து ''பெல்'' நிறுவனம் அறிக்கை சமர்ப்பித்தது. இந்த நவீன திட்டம் இந்தியாவில் முதன் முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுவதால் 5 கிராமங்களுக்குத் தேவையான ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள போட்டோ வோல்டேக் கருவிகளை இலவசமாக வழங்கும்படி சென்ட்ரல் எலக்ட்ரானிக் நிறுவனத்தை மத்திய அரசு பணித்துள்ளது. இந்த 5 கிராமங்களைப் பொறுத்த வரையில் இத் திட்டம் தமிழ்நாடு மின் வாரியத்தின் ஒத்துழைப்புடன் நடப்பு நிதி ஆண்டிலேயே (31—3—1984க்குள்) நிறைவேற்றப்படும்

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே 25 கிராமங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், 5 கிராமங்களிலேதான் 31—3—1984க்குள் இது முடிவடையும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது ஏற்கெனவே இந்தியாவிலே வேறு மாநிலத்திலே ஏதாவது பரீட்சார்த்தமாக செய்து பார்த்திருக்கிறார்களா ? அல்லது நம்முடைய மாநிலத்திலேதான், இது முதன் முதலிலே ஏற்படுத்தப் படுகிறதா ? அப்படி என்றால், இது வெற்றிகரமாக நடைபெறும் என்ற நம்பிக்கை உள்ளதா? அப்படி வெற்றி பெற்றால் எல்லாக் கிராமங்களிலும், இதை அமுல்படுத்தும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மரபு வழிப்படா சக்தி மூலங்களுக்கான துறை Department of Non-Conventional resourc s of En'rgy. அவர்கள் ஒரு திட்டம் வகுத்துள்ளார்கள். அதாவது எளிதாக

சென்று அடைய முடியாத மலைப் பகுதிகளிலே மலைவாழ் மக்கள் இருக்கின்ற பகுதிகளிலே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. இங்கே 85 கிராமங்களிலே அத்தகைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பினோம். இருந்தாலும், 17 கிராமங்களுக்காவது தரவேண்டுமென்று நாம் இந்திய அரசைக் கேட்டோம். அவர்கள் 5 கிராமங்களுக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று அனுமதி வழங்கியிருக்கிறார்கள். இது முதன்முதலாக சோதனை அடிப்படையில் செய்யப்படுகிறது. அதன் விளைவுகளைப் பொறுத்து இருந்து பார்த்துத்தான் வெற்றிகரமான திட்டமா இல்லையா என்பதை அறிய வேண்டும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே கரந்தா மலைப் பகுதியிலே அந்த மலை உச்சியிலே 1,500 மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசாங்கமே அங்கே செயல்படுத்த பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது, 5 கிராமங்கள், கன்னூர், கள்ளிப்பாறை, உண்டக்கல் வளைவு, அக்காரப்பட்டி, மேல்நாடு மன்னூர், தென் ஆற்காடு, சேலம் மாவட்டத்திலே உள்ள கல்ராயன் மலைப் பகுதியிலே உள்ள இந்தக் கிராமங்களுக்கு 31—3—1984-க்குள் அமல்படுத்தக் கூடிய திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற திட்டம் பற்றிய பதில் என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சூரிய ஒளி பகலில் தான் இருக்கிறது. அப்படியிருக்கிறபோது, இரவு நேரத்திலே சூரிய ஒளியில் எப்படி மின்சாரத்தைத் தயாரிக்க முடியும் ? நிலா வெளிச்சத்திலிருந்தோ அல்லது நட்சத்திர வெளிச்சத்திலிருந்தோ மின்சாரம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சூரிய வெளிச்சத்திலிருந்து தான் மின்சாரம் பெறப்படுகிறது. பகலில் அதை சேமித்து வைத்து இரவிலே பயன்படுத்துவதுதான். எப்படி டார்ச் லைட்டிலே சேமித்து வைத்துக் கொண்டு அவ்வப்போது பயன்படுத்துகிறோமோ அதைப் போன்றதுதான் இது. நிலா வெளிச்சம், நட்சத்திர வெளிச்சம் எல்லாம் அவ்வளவு எளிதானதல்ல.